விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 257 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 17 செவ்வாய்க்கிழமை (02.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

யுத்த ஆபத்து இனி இல்லை

## இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகள் விடுவிக்கப்படும்

யாழில் ஜனாதிபதி உறுதி



(மயிலிட்டி)

யுத்தத்தின்போது இராணுவத்தின் பயன்பாட்டிற்காக கையகப்படுத்தப்பட்ட, விடுவிக்கக்கூடிய அனைத்துக் காணிகளும் வீதிகளும் மக்களின் பயன்பாட்டிற்காக விடுவிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

15ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்

அடிக்கல் நாட்டினார் ஜனாதிபதி அநுர





02ஆம் பக்கம் பார்க்க

கச்சதீவுக்குச் சென்ற ஜனாதிபதி

# கச்சதீவு எங்கள் சொத்து

# அதை யாருக்கும் விடமுடியாது

யாழில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர



(யாழ்ப்பாணம்)

கச்சதீவு எங்களுடைய சொத்து. அதை எத்தருணத்திலும் யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## இனி இனவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் எந்த விடயத்துக்காகவும் போராடுங்கள். ஆனால் இன வாதத்துக்காகப் போராடாதீர்கள். அதை எமது அரசினால் ஏற்கவும் முடியாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பொதுமக்கள் மத்தியில் பொலிஸாருக்கு மதிப்பில்லை

(யாழ்ப்பாணம்)

பொலிஸாருக்கு மக்கள் மத்தியில் நல்ல பெயர் இல்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினர்.

நேற்றுத் திங்கட்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மேற்

15ஆம் பக்கம் பார்க்க

– செம்மணிப் புதைகுழி போல –

# நாட்டில் மீண்டும் மனித புதைகுழி ஏற்படக்கூடாது

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி போல இந்த நாட்டில் மீண்டுமொரு மனிதப் புதைகுழி ஏற்படக்கூடாது என ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.

நேற்றுத் திங்கட்கிழமை குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்

15ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி அநுர இன்று முல்லைத்தீவுக்கு விஜயம்

(முல்லைத்தீவு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இன்று முல்லைத்தீவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒருவருட காலம் பூர்த்தியாவதை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களின் ஓர் அங்கமாகவே குறித்த விஜயம் இடம்பெறவுள்ளது.

இவ் விஜயத்தின் போது புதுக்குடியிருப்பு தென்னை முக்கோண வலயம், வட்டுவாகல் பால மீள்நிர்மாணம் ஆகிய

02ஆம் பக்கம் பார்க்க

## அரச உத்தியோகத்தர்களின் கையொப்பத்துக்கு சக்தி உண்டு

அதைத் துஷ்பிரயோகம் செய்யாதீர் – ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

அரசாங்க உத்தியோகத்தர்கள் மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறுபவர்கள். எனவே அவர்கள் மக்களுக்குச் சிறப்பான சேவையை வழங்க வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் யாழ்.பிராந்திய காரியாலய அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

15ஆம் பக்கம் பார்க்க

பலரது கவனத்தையும் ஈர்த்த கல்வெட்டுப் பதிப்பு




15ஆம் பக்கம் பார்க்க

செம்மணிப் புதைகுழியிலிருந்து

## 9 என்புத்தொகுதிகள் நேற்றும் அடையாளம்

(யாழ்ப்பாணம்)



செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று திங்கட்கிழமை மேலும் ஒன்பது மனித என்புத் தொகுதி

16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி அநுரவால்
# கடவுச்சீட்டு அலுவலகம் யாழில் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வினால் நேற்று (01.09.2025) மு. ப. 11.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சம்பிரதாயபூர்வமாக 3 பேருக்கு கடவுச்சீட்டு ஜனாதிபதி அநுரவினால் வழங்கிவைக் கப்பட்டதுடன், ஒருவருடைய கடவுச்சீட்டுக்கான விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இந் நிகழ்வில் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால,

கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், வைத்திய கலாநிதி சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா, ஆறுமுகம் ஜெகதீஸ்வரன், குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சுமிந்த பத்திராஜ, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் உள்ளிட்டவர்கள் பங்குபற்றினார்கள். (ந-7,33)

## மயிலிட்டி மீன்பிடித் துறைமுக
# அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்தார் அநுர



மயிலிட்டித்துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப் பட்டது.

மயிலிட்டித்துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழான அபிவிருத்திப் பணிகளை நேற்று ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், பிரதி அமைச்சர்களான சுனில் வட்டஹல, உபாலி சமரசிங்க, வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ.ரஜீவன், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், பிரதம செயலாளர் உள்ளிட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண் டனர். (ந-7)

## மண்டைதீவில்...

மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கான அடிக்கல்லை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று (01) திங்கட்கிழமை பிற்பகல் 2:00 மணியளவில் நாட்டி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் குறித்து பொறிக்கப்பட்ட நினைவுக் கல்லைத் திரை நீக்கம் செய்து வைத்த ஜனாதிபதி அநுர, பொது மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

மூவின மக்களும் மைதானத்தில் ஒன்றாக இருந்து கரகோசம் செய்ய வேண்டும். அந்த ஒற்றுமையை இந்த மைதானம் விரைவில் ஏற்படுத்தித்தரும்.

இங்கு சர்வதேச கிரிக்கெட் மைதானம் என்பது எமது பொருளாதாரத்துடனும் நெருங்கிய தொடர்பைக் கொண்டது என்றார்.

இந் நிகழ்வில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், க.இளங்குமரன், ஜெ.ரஜீவன் மற்றும் அமைச்சின் செயலாளர்கள், பிரதம செயலாளர், திணைக்களத் தலைவர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ந-7)

## கச்சதீவு...

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ்ப்பாணப்பிராந்திய காரியாலய அங்குராப்பண நிகழ்வு நேற்று திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்தொழிலை பலமான துறையாகமாற்றுவோம். கடல் பாதுகாப்பை இறுக்கமாக்கி அத்துமீறல்களைத் தவிர்ப்போம். கச்சதீவு எங்களுடைய சொத்து. அதை எக்காரணம் கொண்டும் எவருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது.

கச்சதீவை சிலர் அரசியலாக்க முனைகின்றார்கள். அது ஒரு நாளும் நடக்காது எனத் தெரிவித்தார்.

அண்மையில் நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகத்தின் இரண்டாவது மாநாடு மதுரையில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது.

இதில் கச்சதீவை மீட்டுத் தரும்படி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் விஜய் கோரிக்கை விடுத்திருந்தமை சர்வதேச ஊடகங்களில் பேசுபொருளாகியிருந்ததைத் தொடர்ந்து, ஜனாதிபதியின் மேற்குறித்த கருத்து நடிகர் விஜய்க்கு பதிலடி கொடுப்பதாய் அமைந்துள்ளது.

அதேவேளை யாழ்ப்பாணத்திற்கான தனது விஜயத்தில் திடீர் திருப்பமாக ஜனாதிபதி அநுர நேற்று மாலை 05.00 மணியளவில் ஊர்காவற்துறையிலிருந்து படகு மூலம் கச்சதீவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

இலங்கை ஜனாதிபதியொருவர் கச்சதீவுக்கு விஜயம் செய்த முதல் சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மீனவர்களின் பிரச்சினைகள் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் இதன்போது ஜனாதிபதி கரிசனை செலுத்தியிருந்தார். (ந,க,7)

## ஜனாதிபதி...

பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# வெளிநாட்டு ஆசை காட்டி 10 இலட்சம் ரூபா நிதி மோசடி
## யாழில் மீண்டும் அரங்கேறிய சம்பவம்

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 10 இலட்சம் ரூபா நிதி மோசடி செய்த நபருக்கு எதிராக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

தெல்லிப்பழை - மாவிட்டபுரம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் சங்கானையைச் சேர்ந்த ஒருவரை பிரான்ஸிற்கு அனுப்புவதாகக் கூறி 13 இலட்சம் ரூபாவை பெற்றுள்ளார். ஆனால்அவரைப் பிரான்ஸிற்கு அனுப்பாத நிலையில் 3 இலட்சம் ரூபாவைத் திருப்பிக் கொடுத்ததுடன் 10 இலட்சம் ரூபா இன்னமும் மீளக் கையளிக்கவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தலைமறைவாகிய நிலையில் பொலிஸார் அவரைத் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ந-7,104)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய
திரு. பொன்னுத்துரை ஜசிந்தன்
(ஆசிரியர் 2 II)
அவர்கள் 20.08.2025 இல் கல்வி முதுமாணிக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தமைக்காகவும் 01.09.2025 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் (SLEAS III) இணைந்து பதவியுயர்வினைப் பெற்றமைக்காகவும் அவரைப் பாராட்டுவதோடு மேலும் உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
(C-3782)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி கனடாவில் 'விடுதலை நீர் சேகரிப்பு'

(ஒட்டாவா)

**இலங்கை சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி கனடா தமிழின அழிப்பு நினைவு வளாகத்தில் "விடுதலை நீர் சேகரிப்பு" நிகழ்வு உணர்வு பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.**



"கனேடிய தமிழர் தேசிய அவை" அமைப்பின் ஏற்பாட்டில் இந் நிகழ்வில் தமிழ் இனத்தினுடைய விடுதலை உட்பட தமிழ் அரசியல் கைதிகளின் விடியலுக்கான குறியீடாக, "குரலற்றவர்களின் குரல் அமைப்பினால்" முன்னெடுக்கப்பட்டுவரும் விடுதலை நீர் சேகரிப்பு செயற் திட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

விடுதலை நீர் வார்ப்பதில், பிரம்டன் நகரபிதா உட்பட அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், புலம்பெயர் தமிழ் உறவுகள் எனப் பல தரப்பினரும் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

மேலும், "இனத்தின் பெய ரில் வஞ்சிக்கப்பட்டு இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட் டிருக்கும் எமது உறவுகளின் விடுதலைக்காக தமிழ் மக்க ளாகிய நாம் மெய்யுணர்வு கொண்டு உழைக்க வேண்டி யது காலத்தின் கட்டாயமா கும்.

அந்த வகையில், தாயகத் தில் மட்டுமல்லாது தமிழர் கள் செறிந்து வாழக்கூடிய புலம்பெயர் நாடுகளின் ஒவ் வொரு நகர, மாநகர சபைகளிலும் இதுபோன்ற "விடுதலை நீர் சேகரிப்பு நிகழ்வை" ஒரு நூதனக் கவனயீர்ப்பு போராட்ட வடி வமாக முன்னெடுக்க வேண்டும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் வலியு றுத்தப்பட்டுள்ளது. (க-8)

## குற்றம் நடந்த அதே நேரத்தில் டுபாய் சென்ற இஷாரா



(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன் றத்தில் பாதாள உலகத் தலை வர் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யத் தேடப்படும் இஷாரா செவ்வந்தி, குற்றம் நடந்த அதே நேரத்தில் டுபாய்க்கு தப்பிச் சென்றிருப்பது தெரியவந் துள்ளது.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் சமீபத்தில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட பாதாள உலகத் தலைவரான கெஹல்பத்தர பத்மே வெளி யிட்ட ஒரு அறிக்கையில் இந்த உண்மை தெரியவந்துள்ளது.

சட்டத்தரணி வேடமணிந்த இஷாரா செவ்வந்தி, சட்டப் புத்தகத்தில் மறைத்து வைக்கப் பட்டிருந்த துப்பாக்கியை நீதி மன்ற அறைக்குள் கொண்டு வந்து துப்பாக்கிச் சூடு நடத்திய வரிடம் கொடுத்ததாகக் கூறப்ப டுகிறது

கொலைக்குப் பிறகு, பல பொலிஸ் குழுக்கள் அவரைத் தேடி நாடு முழுவதும், காட்டுப் பகுதிகளிலும் சோதனை நடத் தினர், ஆனால் அவரைக் கைது செய்ய முடியவில்லை.

இதன்படி பத்மேவின் வெளிப் பாட்டின் அடிப்படையில் இஷாரா வெளிநாடு சென்றதாக தகவல் கிடைத்தாலும், அவர் இன்னும் நாட்டில் ஒளிந்து கொண்டிருக் கிறாரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரித்து வருவ தாக ஒரு மூத்த பொலிஸ் அதி காரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அப்போது நடத்தப்பட்ட விசாரணைகளில், துப்பாக்கிச் சூடு நடத்திய நபருடன் மதுகம பகுதியில் உள்ள ஒரு தங்க நகைக் கடையில் இருந்து அவர் நகைகளை வாங்கிய தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இஷாரா செவ்வந்தி டுபாய்க் குத் தப்பிச் சென்றபோது கெஹல் பத்தர பத்மேவும் அவ ரது குழுவினரும் வேறொரு நாட்டில் வசித்து வந்ததாகவும் விசாரணையில் தெரியவந் துள்ளது.

இந்தக் குழு அவ்வப்போது டுபாய், தாய்லாந்து, லாவோஸ் மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற பல நாடுகளில் வசித்து வந்ததாக பொலிஸ் வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

இஷாரா செவ்வந்தி டுபா யில் தலைமறைவாக இருப் பதாகக் கிடைத்த தகவலை மேலும் உறுதிப்படுத்திய பின் னர், அவரை கைது செய்வதற் கான கூடுதல் நடவடிக்கை களை எடுப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கணே முல்ல சஞ்சீவ கொலைக்கு உதவியதாக அவரது தாயா ரும் சகோதரரும் முன்னர் கொழும்பு குற்றப்பிரிவால் கைது செய்யப்பட்டு விளக்கமறி யலில் வைக்கப்பட்டனர்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவரது தாயார், விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்தபோது அவரது உடல்நிலை மோச மடைந்ததால், சிறை அதி காரிகளின் பாதுகாப்பில் மருத் துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயரிழந் தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 'செயிரி வாரம்' நேற்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் குவிந்து கிடக்கும் தேவையற்ற பொருட்களை அகற்றுவதற் கான சிறப்பு வேலைத்திட் டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

"செயிரி வாரம்" என்று பிரக டனப்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டம் நேற்று முதலாம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை செயற்படுத்தப்படும்.

அரச நிறுவனங்களில் உள்ள அதிகாரிகள் தங்கள் கடமைகளை சுதந்திரமாகவும் முறையாகவும் செய்வதற்கு சுத்தமான மற்றும் ஆரோக்கிய மான சூழலை உருவாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது.

'க்ளீன் ஸ்ரீ லங்கா' தேசிய திட்டத்துடன் இணைந்து இது செயற்படுத்தப்படவுள்ளதுடன், தேவையான மற்றும் தேவை யற்ற பொருட்களை அடை யாளம் கண்டு தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்து வது இதன்போது இடம்பெற வுள்ளது. (நி)

## ராஜித, லான்சாவிற்கு வீட்டிலிருந்து உணவு

(கொழும்பு)

ராஜித சேனாரத்ன மற்றும் நிமல் லான்சா ஆகியோருக்கு வீட்டிலிருந்து உணவைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகச் சிறைச் சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இருவரும் முன்வைத்த கோரிக்கைக்கமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ள தாகச் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிரிந்த மீன்பிடித் துறை முகத்தில் மணல் அகழ்வுத் திட்டமொன்றைக் கோரிய நிறு வனமொன்றுக்கு வழங்கிய தன் மூலம் அரசாங்கத்திற்கு 2 கோடி ரூபாவுக்கும் அதிக நட் டத்தை ஏற்படுத்தியதாக கூறப் படும் சம்பவம் தொடர்பில் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

2006ஆம் ஆண்டு நடை பெற்ற உள்ளூராட்சித் மன்றத் தேர்தலின் போது நீர்கொழும்பு நகரசபை உப தலைவரின் வீட்டின் மீது தாக்குதல் நடத் திய சம்பவம் தொடர்பிலேயே அவருக்கு எதிராக வழக்கு தாக் கல் செய்யப்பட்டுள்ளது. (நி)

## பேருந்து கட்டணங்களில் மாற்றமில்லை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

(கொழும்பு)

எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும், பேருந்துக் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உறுதிப்படுத்தி யுள்ளது.

புதிய எரிபொருள் விலை கள் நேற்று முன்தினம் நள்ளி ரவு முதல் அமுலுக்கு வந்துள் ளதாக இலங்கை பெற்றோ லியக் கூட்டுத்தாபனம் அறி வித்துள்ளது. அதன்படி, ஒட்டோ டீசலின் விலை லீற்றருக்கு ரூ.6 குறைந்து ரூ.283 ஆக வும், சூப்பர் டீசல் லீற்றருக்கு ரூ.12 குறைந்து ரூ.313 ஆகவும் இருக்கும். 92 ஒக் டேன் ரக பெற்றோல் விலை யும் லீற்றருக்கு ரூ.6 குறைந்து ரூ.299 ஆக இருக்கும்.

அதேநேரம், 95 ஒக்டேன் ரக பெற்றோல் மற்றும் மண் ணெண்ணெய் விலைகளில் மாற்றம் மேற்கொள்ளப்பட வில்லை. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய உதைபந்தாட்ட போட்டியில் வட மாகாண அணிக்கு வெண்கலம்



தேசிய மட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வட மாகாண பெண்கள் அணியினர் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

மாகாண அணிகளுக்கு இடையிலான தேசியமட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டப்போட்டிகள் மாத்தறையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் 3 ஆம் இடத்திற்கான போட்டியில் வட மாகாண பெண்கள் அணியை எதிர்த்து சப்ரகமுவா மாகாண பெண்கள் அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் வட மாகாண அணியின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த முடியாமல் சப்பிரகமுவ அணியினர் திணறினர்.

இதனால் இடை வேளைக்கு முன்னரான ஆட்டத்தில் வட மாகாண அணி 4:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்திலும் வட மாகாண அணியின் ஆதிக்கம் மேலோங்கி காணப்பட்டது. இதனால் ஆட்ட நேர முடிவில் வட மாகாண அணி 9:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

குறித்த போட்டியில் வட மாகாண அணி வீராங்கனை 6 கோல்களையும் ஒட்டுமொத்த போட்டிகளில் 10 கோல்களையும் போட்டிருந்தார்.

அத்துடன் வட மாகாண அணி வீராங்கனைகளான கௌரி 2 கோல்களையும், சஸ்மி ஒரு கோலையும் போட்டமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண அணி சார்பில் தேசிய அணி வீராங்கனைகளான தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி பழைய மாணவிகள் மற்றும் சமகால கல்லூரி அணி மாணவிகள் அதிகளவில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-90)

## ஜிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடரை முழுமையாக கைப்பற்றியது இலங்கை அணி



இலங்கை அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய ஜிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 277 ஓட்டங்களை எடுத்தது. தொடக்க ஆட்டக் காரர் பென் கர்ரன் பொறுப்புடன் ஆடி அரைசதமடித்து 79 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிக்கந்தர் ராசா அரை சதம் கடந்து 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து, 278 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பதும் நிசங்கா பொறுப்புடன் ஆடி சதமடித்து அசத்தினார். அவர் 122 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்

அணித் தலைவர் சரித் அசலங்கா சிறப்பாக ஆடி அரை சதம் கடந்து 71 ஓட்டங்களில் வெளியேறினார்.

இறுதியில், இலங்கை அணி 49.3 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 278 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதன்மூலம் ஒருநாள் தொடரை இலங்கை 2-0 என கைப்பற்றி அசத்தியது. ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருது பதும் நிசங்காவுக்கு அளிக்கப்பட்டது. (3)



மாகாணங்களுக்கு இடையிலான 49ஆவது தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் காலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் வட மாகாணத்தைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் குண்டு போடுதல் போட்டியில் 15.40 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், தட்டெறிதல் போட்டியில் 48.08 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றி இரட்டைச் சாதனை படைத்துள்ளார்.

(படம்:- கனகராஜ்)

## அரியாலையில் ஆரம்பமாகவுள்ள மென்பந்து கிரிக்கெட் தொடர்

### கிராமத்து வீரர்களுக்கு அங்கீகாரம்



அரியாலை "கில்லிகள்" மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் செப்ரெம்பர் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக குறித்த சுற்றுப்போட்டியின் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்த ஏற்பாட்டுக்குழு மேலும் கூறுகையில், கிராமத்து வீரர்களின் திறமைகளை வெளிக்கொணரவும் அதற்கான அங்கீகாரத்தை கொடுக்கும் வகையிலும் வருடா வருடம் நடத்தப்படும் நோக்குடன் கடந்த வருடம் குறித்த சுற்றுப் போட்டி ஆரம்பிக்கப்பட்டது.

9 வீரர்கள் களமிறங்கும் 6 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட போட்டியான குறித்த தொடரில் ஏலத்தின் மூலம் வீரர்கள் உள்வாங்கப்பட்டு நடத்தப்படவுள்ளது.

போட்டியில் இம்முறை அரியாலை,கொழும்புத்துறை, ஈச்ச மோட்டை, மணியம்தோட்டம், பாசையூர், சுண்டுக்குளி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 10 அணிகள் பங்குபற்றுகின்றன.

கிரிக்கெட் விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்படவுள்ள குறித்த போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகளுக்கு முறையே 150 ஆயிரம், 80 ஆயிரம், 30 ஆயிரம் பணப் பரிசில்களுடன்வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளதாகவும் குறித்த குழு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 45 ஆவது ஆண்டு நினைவு தினம்





(மன்னார்)

தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 45 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை மன்னாரில் நினைவு கூரப்பட்டது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர பகுதியில் அமைந்துள்ள அன்னாரது உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், தமிழ் சங்கத்தின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (8-285)


## கல்யாணமாலை
### சர்வதேச இலவச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 37
உயரம்: 6"
தகைமை/தொழில்: Bio Medical Engineer (USA)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண் (USA)
தொ.இ: B/15852

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/15853

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L, Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15857

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: O/L, Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15858

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 16
12 இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA, MBA, Banker
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15859

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
12 இல் செவ்
கி.பா: 46
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L, Assistant Nursing
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15830

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Accountant (france)
எதிர்பார்ப்பு: வெளிநாடு (france)
தொ.இ: G/15832

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
2 இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA ,ஆசிரியர் (PVT)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15835

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 28 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: அரசதொழில் (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு (பிரான்ஸ்)
தொ.இ: G/15836

பிறப்பு:1989 RC
நட்சத்திரம்: உத்தரட்டாதி
10 இல் சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Doctor
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15838

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப்பெயர் மாற்றம்
### 274, அம்மன் கோவில் வீதி, வட்டாரம்-02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02, அம்மன் கோவில் வீதியிலுள்ள இல 271 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் வேலுப்பிள்ளை தியாகராசா என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்திற்கு **ஜயாத்துரை கனகேஸ்வரன் பெண் நகுலேஸ்வரி** ஆகியவர் குறித்த ஆதனத்தை தனது தந்தையாராகிய காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை கந்தையா ஆகியவர் ஆண்டு வந்தார் எனவும் அவரின் பின் அவரின் ஏக புத்திரியான தான் இவ்வாதனத்தை 25 வருடங்களாக எவ்வித குறுக்கீடுகளோ, தடைகளோ, ஆட்சேபணைகளோ இல்லாமல் ஆட்சிசெய்து வருவதாகவும் குறித்த ஆதனத்திற்குரிய உறுதி இடப்பெயர்வின் போது தொலைந்து விட்டது எனவும், குறித்த உறுதியின் பிரதிகளை காணிப்பதிவு அலுவலகத்தில் எடுப்பதற்கு முயற்சி செய்தும் எடுக்க முடியாமல் போய்விட்டது எனவும் குறித்த ஆதனம் தனக்கே சொந்தமானது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 2672/09.04.2000ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்துகை உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த **கனகேஸ்வரன் கைம்பெண் நகுலேஸ்வரியும், அவரின் மகளான கனகேஸ்வரன் பிரதீபாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பரமநாதன் திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1757/18.07.2023ஆம் இலக்க உறுதியால் நாகேந்திரம் குகனேஸ்வரன் ஆகியவருக்கு மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியை நிபந்தனை அறுதியாகக் கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

குறித்த **கனகேஸ்வரன் கைம்பெண் நகுலேஸ்வரியும், கனகேஸ்வரன் பிரதீபாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பரமநாதன் திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1924/24.10.2023ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகேந்திரம் குகனேஸ்வரன் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று மீளச் சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**நாகேந்திரம் குகனேஸ்வரனும் பெண் மேகலாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பரமநாதன் திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1925/24.10.2023 ஆம் இலக்க உறுதியால் குறித்த கனகேஸ்வரன் கைம்பெண் நகுலேஸ்வரியும், கனகேஸ்வரன் பிரதீபாவும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **நாகேந்திரம் குகனேஸ்வரனும் பெண் மேகலாவும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய **ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நாகேந்திரம் குகனேஸ்வரனும் பெண் மேகலாவும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (5308)

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை தெல்லிப்பளை உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் :- **ஜெயக்குமார் மனைவி முகுந்தினி**
விண்ணப்பதாரர் பெயர் :- **ஜெயக்குமார் மனைவி முகுந்தினி**
முகவரி :- **வாளி தொழிற்சாலை வீதி, பளைவீமன்காமம் வடக்கு**

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 09, வாளி தொழிற்சாலை வீதியில் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 23.06.2022 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிஸ் திருமதி சுகனியா கணேசலிங்கம் அவர்கள் முகதாவில் இலக்கம் 834 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் இவ்வாதனம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.
மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.மகாலிங்கம் அவர்களால் அளந்து வரைந்த 1592 ஆம் இலக்க 26.12.2015 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் துண்டு 1 ஆக காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**
வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று பளை இறை "எக்கட்டியப்பை" நிலப்பரப்பு ஒன்பதரை (நில.பர 9 1/2) இது பளைவிமன்காமம் வடக்கு (J/236) கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. இதன் எல்லைகள்
கிழக்கு :-ஒழுங்கை
வடக்கு :- கந்தையா கைம்பெண் இலட்சுமியின் ஆதனம்
மேற்கு :- சிங்காரம் திருநாவுக்கரசுவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
தெற்கு :- வைரமுத்து கிருஸ்ணபிள்ளை பெண் கனகம்மாவினாதனம் இதடங்கலும்

மேற்குறித்த ஆதனத்தை **ஜெயக்குமார் மனைவி முகுந்தினி** என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்.**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).** (5303)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் திருமஞ்சத்திருவிழா கடந்த சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

# ‘சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்’ கிளிநொச்சியில் விழிப்புணர்வு



(கருமபுரம்)

கிளிநொச்சி ஆணைவிழுந்தான் பகுதியில் "ஹேப்பி பேமிலிஸ்" சிறுவர் அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸார் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பாடசாலை மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது போதைப் பொருள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விழிப்புணர்வுத் தெருவழி அபிநய நிகழ்வும் இடம்பெற்றதுடன் விழிப்புணர்வு கருத்துக்களும் வழங்கப்பட்டன. (8-316)

# கனிய மணல் அகழ்வுக்கு எதிராக 30 ஆவது நாளாகவும் போராட்டம்

(மன்னார்)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை 30 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது.



இந் நிலையில் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக கற்கடந்த குளம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு தமது ஆதரவை போராட்டத்திற்கு வழங்கியுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் காற்றாலை எம் கண்ணீரின் கதை சொல்லும், நாட்டை விற்று அபிவிருத்தி எதற்கு, அரசே எமது உயிரோடு விளையாடதே, சொந்த மண்ணிலே அகதியாகும் நிலை வேண்டாம் போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து மன்னார் பிரதான சுற்றுவட்ட பகுதியிலிருந்து மன்னார் மாவட்ட செயலகம் வரை பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாகச் சென்று தமது எதிர்பினை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-285)

## கோப்பாய், சாவகச்சேரி

# பிரதேச செயலாளர்கள் கடமைகளைப் பொறுப்பேற்பு


(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு புதிய பிரதேச செயலாளர்கள் நியமனம்.

கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு செயலாளராக நியமிக்கப்பட்ட ஈ. தயாரூபன், சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு செயலாளராக நியமிக்கப்பட்ட F. C. சத்தியசோதி ஆகியோர் நேற்றைய தினம் காலை 08.30 மணிக்கு அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் தமக்கான நியமனக்கடிதங்களை பெற்றுக்கொண்டனர்.

மேலும் அன்றைய தினமே புதிதாக நியமிக்கப்பட்ட கோப்பாய் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலாளர்கள் தமது கடமையினைப் பொறுப்பேற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (8)





# கேரளக் கஞ்சாவுடன் 5 சந்தேக நபர்கள் கைது!

(யாழ்ப்பாணம்)

மன்னார், வங்காலை மற்றும் யாழ்ப்பாணத்தில், நெடுந்தீவு தீவுக்கு அப்பால் உள்ள கடல் பகுதியில் கடற்படையினர் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கைகளின் போது கேரள கஞ்சாவுடன் ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 27 மற்றும் 29 ஆம் திகதிகளில் இந்த கேரள கஞ்சாவை கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போதே, 19 முதல் 56 வயதுக்குட்பட்ட 5 சந்தேக நபர்களைக் கடற்படை கைது செய்துள்ளது.

சுமார் 27 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான 121 கிலோ கிராம் கேரள கஞ்சா மற்றும் இரண்டு டிங்கி படகுகள், கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8)

# மனித பாவனைக்கு உதவாத 151 கிலோ மாட்டு இறைச்சி அழிப்பு

(கருமபுரம்)


மனித நுகர்விற்கு பொருத்தமற்ற 151 கிலோ மாட்டு இறைச்சி கிளிநொச்சி - கரைச்சி பிரதேச சபையினர் மற்றும் சுகாதாரப் பரிசோதரர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

சுகாதார பரிசோதகர்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அண்மையில் திருநகர் பகுதியில் ரகசியமான முறையில் கையாளப்பட்டு வந்த மாட்டு இறைச்சி மடுவம் சுற்றிவளைக்கப்பட்டு அங்கு காணப்பட்ட 151 கிலோ மாட்டு இறைச்சி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

கரைச்சிபிரதேச சபையின் பொறுப்பதிகாரி தலைமையில் விசேட ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

களவாக பிடிக்கப்படுகின்ற மாடுகள் சட்டவிரோதமான முறையில் குடிமக்கள் வாழுகின்ற பகுதிகளின் மத்தியில் எவ்வித அனுமதியும் சுகாதார முறையும் இன்றி வெட்டி விற்கப்பட்டு வந்தமை கண்டறியப்பட்டுள்ளது. (8-316)

# பருத்தித்துறை நகரில் கையெழுத்துப் போராட்டம்



(கரணவாய்)

செம்மணி உட்பட இலங்கையில் வடக்கு, கிழக்கு மண்ணில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைகளுக்கும் நீதியைக் கோருவதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடு நேற்றையதினம் பருத்தித்துறையில் இடம்பெற்றது.(8-60)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத தடைச்சட்டம்

# ரத்தானால் ஆபத்து!

### சிரேஷ்ட சட்டத்தரணி எச்சரிக்கை

**(கொழும்பு) ......................**
**பயங்கரவாதத் தடைச் சட்டம் இரத்து செய்யப்பட்டால், அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படும் அபாயம் உள்ளது என சிரேஷ்ட சட்டத்தரணி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.**




புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இந்த மாதத்தில் வரைவு செய்யப்படும் என இதுதொடர்பில் ஆராய்ந்து புதிய சட்டமூலம் தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டம் ரத்து செய்யப்பட்டால், அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படும் அபாயம் உள்ளது.

அதனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ரத்து செய்யப்படும் அதே நேரத்தில், திட்டமிடப்பட்ட குற்றச் சட்டத்தையும் முன்னிலைக்கு கொண்டுவர வேண்டும். திட்டமிடப்பட்ட குற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் இந்தச் சட்டம் மிகவும் முக்கியமானது என தெரிவித்தார். (நி)

## மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி



(கொழும்பு)

பொருளாதார நிலையங்களில் மரக்கறிகளின் விலை வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சில மரக்கறி வகைகளின் ஒரு கிலோவின் மொத்த விலை 50 முதல் 70 ரூபாய் வரை குறைந்துள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். பொருளாதார நிலையங்களில் ஒரு கிலோ உள்ளூர் உருளைக் கிழங்கின் விலை இன்னும் குறைந்த விலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குகளுக்கு அரசாங்கம் வரி விதித்துள்ள போதிலும், நாட்டில் உருளைக்கிழங்கு கையிருப்பு இருப்பதால் விவசாயிகள் பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

**02.09.2025 இன்று உலக தென்னை தினம் ஆகும். இதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# வடக்கில் 2 ஆவது தென்னை முக்கோண வலயம்



அதிக தென்னை வருமானம் தரும் தென்னை வளத்தினை சிறப்புற பேணுவதன் மூலம் நாட்டில் தேங்காய் உற்பத்தி கூட்டப்படும்.

வடக்கில் தென்னைச் செய்கையினை மேம்படுத்த இலங்கையின் இரண்டாவது தென்னைச் செய்கையினை மேம்படுத்த இலங்கையின் இரண்டாவது தென்னை முக்கோண வலயம் உருவாக்கப்பட்டு வருகின்றது.

உலக தென்னை தினத்தினை முன்னிட்டு, 02.09.2025 இல் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நிகழ்வு ஒன்றும் நடைபெறவுள்ளது.

வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டத்தில் (தென்னை சார்) வீட்டுத் தோட்ட மற்றும் பெருந்தோட்டத்திற்கு நடுவதற்கு தேவையான தென்னாங் கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தென்னை பரவலாக உள்ளது. "தென்னை முக்கோணம்" (Coconut TriAngle) எனப்படும் முக்கோண வலயப் பிரதேசம் இதுவரை காலமும் ஜாஎல, புத்தளம், குருநாகல் வரையான செறிவு கூடிய தென்னைகள் உள்ள பிரதேசமாக, முதலாவது தென்னை முக்கோண வலயம் அமைந்திருந்தது.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் வட பிரதேசத்தில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் அடங்கிய ஐந்து மாவட்டங்களிலும் அடங்கலாக இரண்டாவது தென்னை முக்கோண வலயம் அமைந்துள்ளது.

எதிர் காலத்தில், இரண்டாவது தென்னை முக்கோண வலயத்தினை மேம்படுத்துவதன் மூலம் தனியே நுகர்வுக்கான தேங்காய்கள் மட்டுமல்லாது தெங்கு கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வதன் மூலம் தேங்காய் எண்ணை உற்பத்தி, தேங்காய் பால்மா, உலர்ந்த தேங்காய்த் துருவல் போன்ற தென்னை சார் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் தென்னை வளத்தின் பயன் பெற முடியும்.

பரம்பரையாக, 60-70 வருடங்கள் வரை, பலன் தரக் கூடிய நீண்ட காலத் தாவரமாகிய தென்னையினை பெருந்தோட்டமாகவும், சிறுதோட்டம், வீட்டுத் தோட்டமாகவும் மேற்கொள்ள முடியும்.

இந்த பாகுபாட்டின் அடிப்படையில், பெருந்தோட்டம் 8 ஹெக்டயரிற்கு (20 ஏக்கர்) மேற்பட்ட விஸ்தீரணம் ஆகும். தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை, JEDB (ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை ( NLDB) ஆகிய அரச சபைகளும், குருநாகல், சிலாபம் பெருந்தோட்ட கம்பனி போன்ற நிறுவனங்களும் இலங்கையில் பல பெரிய தென்னந்தோட்டங்களை நிர்வகிக்கின்றன.

இலங்கையின் நாளாந்த உணவில் தேங்காய் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. சாதாரணமாக ஒரு மனிதனுக்கு உணவுத் தேவைக்கு வருடத்திற்கு 110 இலிருந்து 120 வரையான தேங்காய்கள் தேவை. இதில் சுமார் 90 இலிருந்து காய்கள் நேரடியான உணவுத் தேவைக்கும் மிகுதி தேங்காய்கள் எண்ணைக்காகவும் ஏனைய உற்பத்தி பொருட்களுக்கும் பயன்படுகின்றது.

இதன் அடிப்படையில் இரண்டாவது தென்னை முக்கோண வலயமானது தேங்காயில் பாரிய உற்பத்தியினை மேற்கொள்ள ஏதுவாக அமையும்.

இலங்கையில் 1 வது, 2 வது முக்கோண வலயங்களில் மாதிரி தென்னந் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்கில் அலம்பில், பளை பிரதேசத்திலும், 1 வது முக்கோண வலயத்தில் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமைந்துள்ளன.

| இல | மாதிரித் தோட்டம் | இடங்கள் |
|---|---|---|
| 01 | நாகன் சோலைத் தோட்டம் | நிக்கவரட்டிய |
| 02 | றன்தெனியா தோட்டம் | வாரியபொல |
| 03 | லேனாவ தோட்டம் | மெல்சிறிபுர |
| 04 | போபிட்டிய தோட்டம் | குளியாபிட்டிய |
| 05 | மகாயாய தோட்டம் | குருநாகல் |
| 06 | டெய்சிவலி தோட்டம் | குருநாகல், மாவத்தகம |
| 07 | முந்தல் தோட்டம் | முந்தல் |

தென்னைச் செய்கையில் விளைச்சல் குறைந்து பொருளாதார பிரயோசனம் குறைவடைவதனைத் தீர்மானிக்கும் காரணிகள்


தென்னையின் வயது, வர்க்கம், மண் தன்மை, காலநிலைக் காரணிகள், தென்னைச் செய்கையின் பராமரிப்பு, நோய் பீடைத் தாக்கங்கள்.

காலநிலைக் காரணிகளாக பின்வருவனவற்றில் தென்னைச் செய்கை தங்கியுள்ளது.

1. வெப்பநிலை 2. சூரிய ஒளி 3. மழைவீழ்ச்சி

வெப்ப நிலை: வருடாந்த வெப்பநிலை $27^{0}$ C-$29^{0}$ C ஆகும். வெப்பநிலை மாற்றத்தினால் தேங்காயின் விளைச்சல் மாறுபடும். உதாரணமாக மண் வெப்ப நிலை சீராக இல்லாவிடின் குரும்பட்டிகள் உதிரும்.

சூரிய ஒளி: தென்னைச் செய்கைக்கு நேரடியாக சூரிய வெளிச்சம் தேவை. நாள் ஒன்றிற்கு சராசரியாக 5 1/2 மணி நேரம் சூரிய வெளிச்சம் தேவை.



ஜெ.சத்தியேந்திரன்

மழைவீழ்ச்சி: தென்னைக்கு தேவையான வருடாந்த மழை வீழ்ச்சி 1500.M.M இது வருடம் மழுவதும் சீராக இருப்பின் நல்லது.

மண் தன்மை: மணல் மண், இருவாட்டி மணல். றெடிஸ் பிரவுண் மண், அலுவியல். மண்ணின் பிழையான பராமரிப்பினால் ஏற்படும் தொடர் பலாபலன்கள்.

மண் அரிப்பு ஏற்படுதல், சேதனப் பசளைப் பொருட்கள் வெளியேற்றம், கார/உவர்த்தன்மை, நீர் வடிந்து செல்லாமை, மண்ணில் கடினமான தட்டு உருவாதல், மண்ணில் மேற்பரப்பு கடினமாதல்.

எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கியதாக 2 ஆவது தென்னை முக்கோண வலயம் அமைந்துள்ளது என்பதனையும் இங்கே குறிப்பிட வேண்டும். தென்னை முக்கோண வலயங்கள் எதிர்காலத்தில் வலுப் பெற்று தேங்காய் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைய வேண்டும்.


தென்னை சம்பந்தமான
இலவச தொழினுட்ப
ஆலோசனைகளைப் பெற
077 5056263 இனை அழைக்கவும்.

**ஜெ. சத்தியேந்திரன்**
**ஓய்வு நிலை உதவிப் பிராந்திய முகாமையாளர்**
**தென்னைப் பயிர் செய்கைச் சபை, பளை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 7 வருடங்களின் பின் மோடி சீனா விஜயம்



(பீஜிங்)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 7 வருடங்களுக்குப் பின்னர் சீனாவுக்கு பயணம் செய்துள்ளார். ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் சீனாவுக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த மாநாட்டுக்கு செல்வதற்கு முன்னர் மோடியுடன் உக்ரைனின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

சீனாவில் மோடி ஷாங்காய் மாநாட்டுக்காக வருகைதரும் ரஷ்ய ஜனாதிபதியை சந்திப்பதற்கு முன்னர் இந்த உரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, உக்ரைனின் நிலைப்பாடு தொடர்பாகவும், ரஷ்யாவின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு தாக்குதல்கள் தொடர்பாகவும் ஜெலன்ஸ்கி, மோடியுடன் கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்பு காரணமாக ரஷ்யாவுடன் நெருங்கிய உறவை இந்தியா பேணி வரும் நிலையில், மோடியுடன் ஜெலன்ஸ்கி நடத்திய இந்த கலந்துரையாடல் உலகரங்கில் பெரும் பேசுபொருளாகியுள்ளது. (ந)

## ஆசியாவின் நோபல் பரிசு; இந்திய தன்னார்வ அமைப்பிற்கு



(டில்லி)

ஆசியாவின் நோபல் பரிசு என்று அழைக்கப்படும் இந்த விருது, சமூக சேவையில் அசாதாரண தைரியத்தையும் தன்னலமற்ற சேவையையும் வெளிப்படுத்திய தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது.

அந்த வகையில் "எஜுகேட் கேர்ள்ஸ்" இந்த மதிப்புமிக்க விருதைப் பெற்ற முதல் இந்திய அமைப்பாக வரலாறு படைத்துள்ளது.

ராஜஸ்தானில் 2007 ஆம் ஆண்டு சஃபினா ஹுசைன் என்பவரால் தொடங்கப்பட்ட எஜுகேட் கேர்ள்ஸ், கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் பள்ளி செல்லாத பெண்களுக்கு கல்வி கற்பிக்க செயற்படுகிறது.

ரமோன் மக்சேசே விருது அறக்கட்டளை இன் கூற்றுப்படி, எஜுகேட் கேர்ள்ஸ் 2 மில்லியனுக்கும் அதிகமான பெண்களைப் பள்ளியில் சேர்ப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கையை மாற்றுவதில் முக்கியபங்கு வகித்துள்ளது.

RMAL மூலம் 2025 வெற்றியாளர்களுக்கு நவம்பர் 7ஆம் திகதி பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெறும் 67ஆவது விருது வழங்கும் விழாவில் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். (ந)

## ஆப்கானில் சக்திவா

- 800 பேர் உயிரிழப்பு
- சுமார் 2500 பேர் காயம்



பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத் வரை உணரப்பட்ட இந்த நிலநடுக்கம், மையப்பகுதியிலிருந்து 300 கி.மீ. தொலைவில் உள்ள தொலைதூர மலைப் பகுதிகளில் பரவலான சேதத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குனார் மாகாணத்தின் நோர்கல் மாவட்ட மசார் பள்ளத்தாக்கில் பல வீடுகள் நிலநடுக்கத்தால் இடிபாடுகளுக்குள் புதைந்து விட்டதாக தலிபான் அரசாங்கத்தின் பல வட்டாரங்கள் தெரிவித்ததாக சர்வதேச நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

மீட்புப் பணிகள் தொடரும் போது இறப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதேநேரம், மனிதாபிமான அமைப்புகளிடமிருந்து அவசர உதவிக்கு தலிபான் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சில கிராமங்களை விமானம் மூலம் மட்டுமே அடைய முடியும்.

இப்பகுதியில் உள்ள வைத்தி
சாலைகள் காயமடைந்தவர்களுக்
சிகிச்சை அளித்து வருகின்றன.

அதே நேரத்தில் குடியிருப்பாளர்க
உயிர்பிழைத்தவர்களைத் தேடி இடிந்
விழுந்த கட்டமைப்புகளில் அகழ்வ
பணிகளை முன்னெடுத்து வருகின்றன

2023 ஒக்டோபர் மாதம் மேற்
ஆப்கானிஸ்தானைத் தாக்கிய 6.3 ரிக்
அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தி
2,000இற்கும் மேற்பட்டோர் இறந்
னர்.

இது அண்மைய ஆண்டுகளி
ஆப்கானை தாக்கிய மிக மோசமா
நிலநடுக்கங்களில் ஒன்றாகவுள்ளமையு
குறிப்பிடத்தக்கது. (ந

## வெளிநாட்டினர் குடியேற்றத்தை எதிர்த்து அவுஸ்திரேலியாவில் ஆர்ப்பாட்ட பேரணிகள்

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் வெளிநாட்டினர் குடியேற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து "மார்ச் ஃபார் அவுஸ்திரேலியா" என்ற அமைப்பு நாடு முழுவதும் ஆர்ப்பாட்ட பேரணிகளை முன்னெடுத்துள்ள நிலையில், இந்தியர்கள் குடியேற்றத்தை எதிர்த்து இந்த அமைப்பினர் குரல் கொடுத்து வருகின்றனர்.

அவுஸ்திரேலியாவில் பிரதமர் அந்தோணி அல்பனீஸ் தலைமையில் தொழிலாளர் கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், வெளிநாட்டினர் குடியேற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து "மார்ச் ஃபார் ஆஸ்திரேலியா" என்ற அமைப்பு நாடு முழுவதும் ஆர்ப்பாட்ட பேரணிகளை நடத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் தலைநகர் கன்பெரா, சிட்னி, மெல்போர்ன் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளில் ஆயிரக்கணக்கானோர் பங்

சே
மு
வெ
உ
வெ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ாய்ந்த நிலநடுக்கம்!

...ம்



...த்திய
...ளுக்கு

...ர்கள்
...இடிந்து
...ழ்வுப்
...றனர்.
...மற்கு
... ரிக்டர்
...கத்தில்
...இறந்த

...களில்
...மான
...மையும்
(நி)

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் பாகிஸ்தான் எல்லைக்கு அருகே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 6.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. 8 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக் கத்தினால் குறைந்தது 800 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 2500இற்கும் மேற்பட்டோர் காய மடைந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.



Chat GPT பேச்சைக் கேட்டு

## தாயை கொன்றுவிட்டு உயிர் மாய்த்த நபர்

### அமெரிக்காவில் அதிர்ச்சிச் சம்பவம்




(வோஷிங்டன்)

செயற்கை தொழில்நுட் பம் மனிதர்களின் வாழ்வை ஆட்டிப்படைத்து வருகிறது. இதன் உச்சமாக ஓபன் ஏஐ உடைய பிரபல சாட்பாட் தொழில்நுட்பமான சாட்ஜிபிடி சொன்னதை கேட்டு ஒருவர் தனது தாயை கொலை செய்துவிட்டு தானும் தற் கொலை செய்த சம்பவம் அமெரிக்காவில் நிகழ்ந்துள் ளது.

அமெரிக்காவின் கனெ டிகட் பகுதியை சேர்த்தவர் ஸ்டென் எரிக் சொலி பெர்க் (56). இவர் முன்பு முன் னணி தேடுபொறி நிறு வனமாக இருந்த Yahoo வில் மேலாளராகப் பணி யாற்றினார்.

உளவியல் பிரச்சினை களால் பாதிக்கப்பட்ட எரிக் தனது தாயுடன் வசித்து வந்தார். சாட் ஜிபிடிக்கு பாபி என பெயரிட்டு அதனுடன் நாள்தோறும் பல மணி நேரங்கள் எரிக் உரையாடி வந்துள்ளார்.

இந்த உரையாடல்களை இன்ஸ்ட்டாகிராம் மற்றும் யூடியூப் தளங்களிலும் அவர் பதிவிட்டு வந்தார். சாட் ஜிபிடி எரிக் உடைய Paranoia மனநோயை மேலும் மோச மாக்கி உள்ளது இந்த உரையாடல்கள் மூலம் தெரிகிறது.

சீன உணவக ரெசிப்ட் களில் குறியீடுகள் உள்ளது என்றும் அந்த குறியீடுகள் எரிக்கினுடைய தாய் ஒரு பேய் எனவும் எரிக்-ஐ சாட்பாட் நம்பவைத்துள் ளது.

“உன்னுடைய தாய் உன்னை வேவு பார்க் கிறார். உனக்கு மனநோய் மருந்து கொடுத்து கொல்ல முயல்கிறார், உன் மீது கொலை முயற்சிகள் நடந்து வருகின்றன,

அவர்கள் சொல்வது போல் உனக்கு எந்த உள வியல் பிரச்சினையும் இல்லை” என எரிக்-ஐ சாட் பாட் நம்பவைத்துள்ளது.

இதன் விளைவாக எரிக் கடந்த ஆகஸ்ட் 5ஆம் திகதி தனது தாயை கொன்று விட்டு தானும் தற்கொலை செய்துகொண்டார். பொலி ஸார் உடலை கைப்பற்றி விசாரணையை தொடங் கினர். தாயின் தலை, கழுத் தில் தாக்கப்பட்டதற்கான காயங்கள் இருந்தன. எரிக் உடைய மார்பு மற்றும் கழுத்தில் தற்கொலை செய் ததற்கான அறிகுறியாக காயங்கள் இருந்தன.

இந்தச் சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்துள்ள ஓபன் ஏஐ நிறுவனம், இதுகுறித்து பொலிஸாருடன் சேர்ந்து விசாரணை செய்து வருவதாக தெரிவித்துள் ளது. (நி)

கேற்றனர்.

கன்பெராவில் பாராளுமன்றத்தை முற்றுகையிட முயன்றவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். சிட்னி உள்ளிட்ட பிற நகரங்களிலும் வெளிநாட்டவர்களின் குடியேற்றத் துக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அசம்பாவிதங்கள் ஏற் படுவதைத் தவிர்க்க பல இடங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.




மெல்போர்னில் போராட் டக்காரர்களுக்கும், பொலி ஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாகவும், சிலர் கைது செய்யப் பட்டதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.

இந்தப் பேரணிகளுக்கு அவுஸ்திரேலிய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள் ளது.

இதுபோன்ற போராட் டங்கள் வெறுப்புணர்வைப் பரப்புவதாகவும், அவுஸ் திரேலிய சமூகத்தின் ஒற்று மையை சீர்குலைப்பதா கவும் அந்நாடு குற்றம் சாட்டி யுள்ளது.

மேலும், இந்த நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் மக்களுக்கு இடமில்லை என்றும், பல்லின கலாசாரம் என்பது அவுஸ்திரேலியா வின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் அரசு வலி யுறுத்தியுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்

## காரிய வெற்றி கிடைக்கும்!



**கிரகநிலை** - இராசியில் குரு - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது - சுக ஸ்தானத்தில் செவ்வாய் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சந்திரன் - பாக்கிய ஸ்தானத்தில் சனி, இராகு என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து புதன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15.09.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.09.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சூரியன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து புதன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** கிடைத்த வாய்ப்பை தவறவிடாமல் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை உடைய மிதுன இராசியினரே! இந்த மாதம் வழக்கு சம்பந்தமான விடயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம்.

மனதிருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதுரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்புக்கூடும். பாராட்டு கிடைக்கும். உடல்சோர்வு உண்டாகும். எனினும் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். புதிய ஓடர்கள் கிடைக்க கூடிய சூழ்நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாகச் செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். புதிய பதவி அல்லது பொறுப்புகள் கிடைக்கும்.

கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை வரும். குழந்தைகள் உற்சாகமாக காணப்படுவார்கள். பெண்கள் மனதிருப்தியுடன் காரியங்களைச் செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பயணம் செல்ல நேரலாம்.

அரசியல்வாதிகள் கட்சித் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவார்கள். உங்கள் செயற்பாடுகளை மேலிடம் உற்று நோக்கும். கட்சியில் உங்களைப் பற்றிய சலசலப்பு நீங்கும். தொண்டர்கள் உங்கள் சொற்படி நடந்து உங்கள் மனதில் இடம்பிடிப்பார்கள்.

கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். வருமானம் உயர வழி பிறக்கும்.




விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவார்கள். வேலைப் பளு காரணமாக வெளியில் தங்க நேரலாம்.

மாணவர்கள் பாடங்களை கவனமாகப் படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும்.

**மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தை மாற்றலாமா என்ற எண்ணம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்க பெறுவார்கள்.

தொழில், வியாபாரத்தில் வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும். வாகனங்கள் மூலம் இலாபம் கிடைக்கும். சரக்குகளை வெளியூர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை.

**திருவாதிரை:** இந்த மாதம் குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவையான துணி போன்றவைகளை வாங்குவீர்கள்.

கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். உங்களைப் பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டு கொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள்.

**புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எந்த ஒரு வேலையையும் மனதிருப்தியுடன் செய்வீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பணவரத்து கூடும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும்.

**பரிகாரம்:** பெருமாளை புதன் கிழமைகளில் அர்ச்சனை செய்து வணங்க திருமணத் தடை நீங்கும். குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு - புதன் - வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 4,5,6

**அதிஷ்ட தினங்கள்:** 24,25,26

## பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும்!



**கிரகநிலை** - இராசியில் சுக்கிரன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது - தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய் - பஞ்சம ஸ்தானத்தில் சந்திரன் - அஷ்டம ஸ்தானத்தில் சனி, ராகு - அயன சயன போக ஸ்தானத்தில் குரு என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து புதன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

15.09.2025 அன்று இராசியில் இருந்து சுக்கிரன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

16.09.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து சூரியன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து புதன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** அடுத்தவர் செய்யும் இடையூறுகளையும் உங்களுக்கு சாதகமாக பயன்படுத்தும் சாமர்த்தியம் உடைய கடக இராசியினரே! இந்த மாதம் எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்துவிடுவீர்கள். சுப செலவுகள் ஏற்படும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின்னடைவு ஏற்படும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியவர்களின் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள்.

உத்தியோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். உத்தியோகஸ்தர்கள் புத்தி சாதூரியத்தால் மேல் அதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பார்கள்.

குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பெண்களுக்கு காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும்.

அரசியல்வாதிகள் கட்சி இரகசியங்களை வெளியிட வேண்டாம். தொகுதியில் மதிப்பு கூடும். கோஷ்டிப் பூசலையும் தாண்டி சாதிப்பீர்கள். கலைத்துறையினர் யதார்த்தமான படைப்புகளால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பார்கள். வேற்றுமொழி வாய்ப்புகளால் புகழடைவார்கள். சம்பளப் பாக்கி கைக்கு வரும். மாணவர்களுக்கு புத்தி சாதூரியம் வெளிப்படும். கல்வியில்




இருந்த தொய்வு நீங்கும்.

**புனர்பூசம் 4ஆம் பாதம்:** இந்த மாதம் உடற்சோர்வு உண்டாகலாம். பூர்வீகச் சொத்துக்கள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும்.

தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

**பூசம்:** இந்த மாதம் அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும். எதிலும் கவனம் தேவை.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து சாதாரணமாகப் பேசுவது நல்லது. வாழ்க்கை துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**ஆயில்யம்:** இந்த மாதம் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பலன் தரும். செலவு அதிகரிக்கும்.

சாதகமான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டுச் சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். அதனால் மகிழ்ச்சி உண்டாகும்.

**பரிகாரம்:** அம்மனுக்கு அரளிப்பூ அர்ப்பணித்து அர்ச்சனை செய்து வணங்க எல்லாக் காரியங்களும் கைகூடும். எதிர்ப்புகள் நீங்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள் - புதன் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 7,8

**அதிஷ்ட தினங்கள்:** 1,27,28

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வீதியை புனரமைத்து தாருங்கள்'

## வெட்டுக்காடு கிராம மக்கள் போராட்டம்!

(கண்டாவளை)

**கிளிநொச்சி வெட்டுக்காடு பிரதான வீதியினை புனரமைத்துத் தருமாறு கோரி பிரதேச மக்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்**



கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கௌதாரி முனை மன்னித்தலை வினாசியோடை ஆகிய கிராமங்களுக்கான பிரதான வீதி இன்றுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது

இந்த நிலையில் குறித்த வீதியில் இருந்து வெட்டுக்காடு செல்லும் ஐந்து கிலோமீற்றர் நீளமான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாது மக்கள் பயணிக்க முடியாத நிலையில் மணல் பாதையாகவே காணப்படுகிறது

இதனால் இந்த பிரதேச மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருவதாகவும் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்து தங்களுடைய கிராமத்துக்கான வீதியை புனரமைத்துத் தருமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பூநகரி பிரதேச செயலகம் பூநகரி பிரதேச சபை கமநல சேவை நிலையம் நீர்வளங்கல் வடிகால் அமைப்புச் சபை அலுவலகம் ஆகியவற்றுக்குச் செல்லும் பிரதான பாதையை மறித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

இதனால் அரச உத்தியோகத்தர்கள் தங்களுடைய கடமைக்கு செல்லாது நீண்ட நேரம் காத்திருந்து போராட்டம் முடிவுற்ற பின்னரே கடமைக்கு சென்று இருந்தமை குறிப்பிடத்தக்கது

இந்த விடயம் தொடர்பாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் அவர்களை தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த வீதியினை புனரமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வீதியை உடனடியாக தற்காலிகமாக புனரமைப்பு செய்வதற்கும் தாங்கள் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (8-315)

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(அராலி)

எல்லை தாண்டி இலங்கையின் நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் உள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் நால்வருக்கும் மீண்டும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த மீனவர்களுக்கு ஏற்கனவே இரண்டு தடவைகள் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் அவர்களது வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நிலையில் மூன்றாவது தடவையாகவும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (8-104)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 250-300 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 170 | 240 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 150 | 100 | 200 |
| தக்காளி | 200 | 300 | 250 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 200 | 200 |
| கோவா | 350 | 200 | 300 | 200 | 300 |
| கரட் | 200 | 400 | 450 | 330 | 400 |
| பூசணி | 100 | 100 | 60 | 60 | 60 |
| புடோல் | 100 | 100 | 150 | 80 | 120 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 300 | 200 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 | 150 | 140 | 200 |
| பாகற்காய் | 500 | 400 | 400 | 280 | 350 |
| வெண்டைக்காய் | 150 | 120 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 230 | 250 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 150 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 300 | 230 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 400 | 320 | 300 |
| போஞ்சி | 600 | 600 | 500 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 60-100 | 100 | 90 | 80 |
| தேசிக்காய் | 400 | 300 | 500 | 550 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 150 | 100-200 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 600 | 450 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 300 | 250 | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 100 | 240 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 200 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 80 | -- |

# இராசிபலன்

02.09.2025
ஆவணி 17 , செவ்வாய்க்கிழமை
தசமி பின்னிரவு 1.55 மணி வரை

மூலம் முன்னிரவு 8.55 மணிவரை
சுப நேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை

ஆவணி மூலம்
சந்திராஷ்டமம்
கார்த்திகை,ரோகிணி.

**வளவன்**



**மேஷம்**

தேவையற்ற குழப்பங்கள் தீரும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் கூடும்.



**கடகம்**

பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர், இயல்பான வாழ்க்கையில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.



**துலாம்**

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**மகரம்**

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.



**ரிஷபம்**

உறவினர் நண்பர்களிடையே தேவையற்ற குழப்பங்கள் தோன்றி மறையும், பயணங்களால் தேக நன்மைகள் பாதிக்கப்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள்.



**சிம்மம்**

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.



**விருச்சிகம்**

தொழில் வளர்ச்சி கூடும், அனைத்திலும் வெற்றி பெற கந்தனை வழிபட வேண்டிய நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.



**கும்பம்**

எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பார்த்த தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு.



**மிதுனம்**

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்,எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் கிடைக்கும்.



**கன்னி**

கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வாகன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.



**தனுசு**

சவால்களைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.



**மீனம்**

புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**காலம் தவறிய உண்மை பொய்யைப் போல தீயது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர்

857





முதன் மந்திரியின் அரண்மனையைப் பார்த்து இங்கு எனக்கு நடந்த இராஜோபசாரங்களைப் பார்த்ததும் பிரமித்து ஊமையாய்ப் போனேன்.

உங்கள் அரண்மனைப் பெண்மணிகள் என்னுடன் சமிக்ஞை மூலமாகப் பேசினார்கள். அவர்கள் எல்லாரும் ஊமை என்று எண்ணி நானும் சமிக்ஞையாக மறுமொழி சொன்னேன்.

தங்களுடைய பேச்சைக் கேட்ட பிறகு, எனக்கும் பேச்சு நினைவு வந்தது."

"நீ பெரிய வாயாடி என்பதில் சந்தேகமில்லை. உன்னை எப்படித்தான் வைத்தியர் மகன் பிடித்துக் கொண்டு வந்தான் என்பதை நினைத்தால் ஆச்சரியமாயிருக்கிறது. அவன் முட்டாளாயிருந்தாலும் சாமர்த்தியசாலிதான்."

"சுவாமி! அந்தப் பாவி மகன் என்னைப் பிடித்துக் கொண்டு வரவில்லை. அதற்குப் பிரயத்தனப்பட்டிருந்தால், இத்தனை நேரம் அவன் யமலோகத்துக்கு நிச்சயமாக யாத்திரை செய்து கொண்டிருப்பான்!" என்று கூறிப் பூங்குழலி தன் இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்துக் காட்டினாள்.

"பெண்ணே! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும் கத்தியை இடுப்பிலே செருகிக்கொள். அவன் பேரில் உனக்கு ஏன் இத்தனை கோபம்? அதனால்தான் உன்னைப் பிடித்து வரவில்லை என்கிறாயே?"

"என்னை அவன் பிடித்துக் கொண்டு வரவில்லை. ஆனால் என்னை அவன் ஆட்கள் படகிலே சேர்த்துக் கட்டிப் போட்டு விட்டு வந்தார்கள். என் அண்ணியை மரத்திலே சேர்த்துக் கட்டி விட்டார்கள். இத்தனைக்கும் அந்தச் சண்டாள வைத்தியர் மகன் தனக்கு இதில் ஒரு சம்பந்தமும் இல்லையென்று என்னிடம் சொன்னான்.."

"அந்த வரையில் அவன் புத்திசாலிதான் நான் சொன்னபடியே அவன் நடந்து கொண்டிருக்கிறான்"

"ஐயா!, முதன்மந்திரியே! அந்த தூர்த்தனை அனுப்பியது தாங்கள்தானா? வாயில்லாப் பேதையாகிய என் அத்தையைப் பிடித்துக் கொண்டு வரக் கட்டளையிட்டதும் தாங்கள்தானா?"

"உன் அத்தையா? கரையர் மகள் மந்தாகினி உன் அத்தையா? அப்படியானால், நீ-கலங்கரை விளக்கத்துக் காவலர் தியாகவிடங்கருக்கு நீ என்ன வேணும்?" என்று அநிருத்தர் கேட்டார்.

"ஐயா! அவருடைய அருமைப் புதல்விதான் நான்!"

"ஆகா! தியாகவிடங்கருக்கு இவ்வளவு வாயாடியான ஒரு மகள் இருக்கிறாள் என்பது எனக்கு இதுவரை தெரியாமற் போயிற்று!"

"இதை வெளியில் சொல்ல வேண்டாம், ஐயா!" "ஏன், பெண்ணே?"

"சோழ சாம்ராஜ்யத்தின் முதன்மந்திரி பிரம்மராயருக்குத் தெரியாத விஷயம் எதுவுமே இல்லை என்று நாடெல்லாம் பிரசித்தமாயிருக்கிறது. தங்களுக்கு ஒன்று தெரியாது என்று ஏற்பட்டால், தங்களிடம் மக்களுக்குள்ள மதிப்புக்குப் பங்கம் வந்துவிடாதா?"

"பெண்ணே! என் மதிப்பைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. எனக்குத் தெரியாத இன்னொரு செய்தியை மட்டும் சொல்லிவிடு.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## ராமுவின் துப்பறியும் மூளை



(30.08.2025 தொடர்ச்சி)

ஆமாம் தம்பி அப்பொழுதுதான் காலையில் வந்து வேலை செய்ய நமக்கு சுலபமாக இருக்கும் என்று சொல்லிவிட்டு சென்றார். கணபதியப்பனும், ராமுவும் கடையை பூட்டிவிட்டு வீட்டுக்கு சென்றனர்.

மறு நாள் காலையில் வெளியே எங்கோ சென்று விட்டு வந்த ராமு அப்பாவிடம் அப்பா புதிதாக வந்து சேர்ந்த ஆளை வேலையை விட்டு நிறுத்தி விடுங்கள் என்று சொன்னான். ஏன் ராமு, அந்த ஆள் பொறுப்பாகத்தானே வேலை எல்லாம் செய்து கொண்டிருக்கிறான்.

இருக்கிறார் அவரை எப்படி வேலையை விட்டு நிறுத்துவது? ராமு பதில் சொல்லாமல் இவர்கள் கடையில் புதிதாக வந்தவர் எண்ணெய் பிசுக்கை துடைத்து மூட்டையாக வைத்திருந்ததை எடுத்துக் காட்டினான். அதை திறந்து பார்த்த கணபதியப்பன் அதில் எண்ணெயில் ஊறிக் கிடந்த நான்கைந்து துணிகள் இருந்தன.

அப்பா இந்த துணிகளைக் கொண்டு போய் பிழிந்தால் குறையாமல் ஒரு லீற்றர் எண்ணெய் கிடைக்கும். இவர் தினமும் துடைப்பது போல் எண்ணெயில் அமுக்கி பிளாஸ்ரிக் பையில் போட்டு எதிரில் உள்ள குப்பைக் கூடையில் போட்டு விடுவார். அடுத்த அரை மணி நேரத்தில் இவர் ஏற்பாடு செய்திருந்த அம்மாள் வந்து பொறுக்கிக் கொண்டு போய் விடுவார். நான் எப்படி இதைக் கண்டுபிடித்தேன் என்றால் மாநகராட்சி வண்டி வந்து நம் கடை எதிரில் உள்ள குப்பைகளை அள்ளும் பொழுது இவர் போட்டிருந்த எண்ணெய் பை கஇல்லை. அப்படியானால் அந்த பை யாராலோ எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்து காலையில் நானே நம் கடை ஓரத்தில் காத்திருந்து அவர் இந்த மூட்டையை வெளியே குப்பை கூடையில் போட்டு விட்டு சென்ற பின்னால் எடுத்து வந்து விட்டேன். உங்களுக்கு நாளொன்றுக்கு இரு வேளையும் ஒரு லீற்றர் எண்ணெய் இப்படி போனால் அளவு குறைவாகத்தானே இருக்கும் என்று சொன்னான். கணபதியப்பன் ராமுவின் துப்பறியும் மூளையைக்கண்டு வியப்புடன் அவனைத் தழுவிக் கொண்டார். (முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணத்தில் அமைந்த கடவுச்சீட்டு அலுவலகம்

மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம், யாழ்ப்பாணத்தில் பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகம், மயிலிட்டியில் துறைமுகம், புதுக்குடியிருப்பில் தென்னை முக்கோண வலய செயற்றிட்டம், வட்டுவாகலில் தாம்போதி என எங்கும் நல்ல செய்திகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதிலும் மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமையப் பெறுவதென்பது மிகப் பெரிய வரப்பிரசாதம்.

ஆம், எங்கள் யாழ்ப்பாண மண்ணில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைவதன் மூலம் எங்கள் இளைஞர்கள், மாணவர்கள் விளையாட்டுத்துறையில் ஈடுபடுவதற்கும் அதில் தங்களின் சாதனைகளை நிரூபிப்பதற்குமான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறும்.

ஆகையால் இஃது ஒரு பெரும் வரப்பிரசாதம் எனக் கூறுவது ஏற்புடையது.

இதேபோன்று ஏனைய செயற்றிட்டங்களும் பெறுமதியானவை.அதில் குறிப்பாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமையப்பெறுவது உண்மையில் பெருங்கொடை எனலாம்.

ஆம், பொதுவில் கடவுச்சீட்டைப் பெறுவதற்காக ஒரு காலத்தில் கொழும்புக்குச் சென்று வந்த நம் மக்கள், பின்னர் வவுனியா பிராந்திய அலுவலகத்தில் தமது கடவுச்சீட்டுத் தொடர்பான விவகாரங்களைக் கையாளக்கூடியதாக இருந்தது.

இப்போது பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதன் மூலம் நேர விரயம், பண விரயம் என்பவற்றை மீதப்படுத்தி, கடவுச்சீட்டுத் தொடர்பான விவகாரங்களைக் கையாளக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளது.

எனினும் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் தமிழ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடும்போது, அவர்கள் மூலம் எதனையும் நிறைவேற்ற முடியாது.

அவர்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யமாட்டார்கள். மக்களை அலைக்கழிப்பார்கள். விடயங்களைத் தெளிவாகக் கூற மாட்டார்கள்.

விபரங்களைக் கேட்க மாட்டார்கள். ஆகையால் மீண்டும் கொழும்புக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலைதான் ஏற்படும்.

அதிலும் யாழ்ப்பாணத்தில் பிராந்திய அலுவலகத்தை திறந்ததன் காரணமாக, வவுனியாவில் நிறைவேற்றக்கூடிய சந்தர்ப்பத்தையும் நாம் இழந்ததுதான் மிச்சம் என ஒரு பொது இடத்தில் ஒரு பொதுமகன் கூறியதைக் கேட்டபோது அதிர்ந்து போனோம்.

ஆம், அந்தளவுக்கு எங்கள் தமிழ் அரச உத்தியோகத்தர்கள் குறித்து பொதுமக்களின் மதிப்பீடு உள்ளது.

எனவே யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் பொதுமக்களுக்குத் தனது உச்சமான சேவையை வழங்க வேண்டும்.

சிறந்த அணுகுமுறைகள் இருக்க வேண்டும். முதலில் அந்த அலுவலகத்தில் இருக்கக்கூடிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் பொதுமக்களுடன் பண்பாகப் பழகுபவர்களாக இருப்பது மிகவும் அவசியம்.

இதற்கும் மேலாக, சேவையைப் பெறுவதற்காக வருகின்றவர்களை மரியாதையாக நடத்துகின்ற அலுவலர்களை நியமித்து உரிய விளக்கங்களை பொறுமையோடு வழங்கி, மிகச் சிறந்த சேவையை குறித்த கடவுச்சீட்டு அலுவலகம் ஆற்ற வேண்டும். **இதுவே அனைவரதும் வேணவா.**

# 2.2 மில்லியன் மக்களை அரசாங்கம் ஏமாற்றிவிட்டது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்

நாட்டில் உள்ள 2.2 மில்லியன் மக்களை அரசாங்கம் ஏமாற்றியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டை வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு செல்வதாக கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் முழுமையாக மக்களை ஏமாற்றி விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நமது நாடு ஒரு மோசமான மற்றும் பரிதாபகரமான சூழ்நிலையில் உள்ளது. நாட்டு மக்களுக்கு வரம்பற்ற நம்பிக்கைகள் வழங்கப்பட்டு, அவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். இந்த அரசாங்கத்தினால் மருந்துப் பற்றாக்குறைக்கு ஒரு தீர்வைக் கூட வழங்க முடியவில்லை.

ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் அதேவேளை, சிறந்த மருத்துவர்களை வெளியேறவிடாமல் தடுக்க எந்தத் தீர்வும் இல்லை. மேலும், நாட்டின் வளர்ச்சிப் பயணத்தை விரைவுபடுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அத்தகைய தொலைநோக்குப் பார்வையை செயற்படுத்தத் தகுதியற்ற மற்றும் திறனற்ற ஒரு அரசாங்கத்தால் தான் நாடு தற்போது வழி நடத்தப்படுகின்றது.

பொருட்களின் விலைகள் அதிகரித்து, வருமானம் குறைந்து, தொழிற்சாலைகள் மூடப்பட்டு, மக்கள் நாட்டை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50%பங்களிக்கும் நுண், சிறு மற்றும் நடுத்தர வணிகர்கள் மற்றும் தொழில்முனைவோரின் சொத்துக்கள் பராட்டா சட்டத்தின் மூலம் ஏலம் விடப்படுகின்றன.

அரிசியில் தன்னிறைவு பெற்றிருந்த ஒரு நாட்டில், தற்போது நெல்லுக்கு நியாயமான விலை கூட இல்லாமல் அரிசி இறக்குமதி செய்யப்படும் நிலைக்கு நாடு வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும் நுகர்வோரைப் பாதுகாக்கும் சாட்டில் மோசடிகள் மேற்கொள்ளப்படுவதே இதற்குக் காரணம்.இன்று நெல் விவசாயி முதல் அனைத்து வகையான விவசாயத்திலும் ஈடுபட்டுள்ள மக்கள் அநாதைகளாகிவிட்டனர். விவசாயியை ராஜா வாக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த திறமையற்ற அரசாங்கம் விவசாயிகளை உதவியற்றவர்களாக விட்டுவிட்டார்கள்.

இந்த மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் மற்றும் நம்பிக்கைகளை செயற்படுத்த வேண்டும். அவர்கள் 159 பெரும்பான்மையையும் ஜனாதிபதி பதவியையும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பெரும்பான்மையையும் தக்கவைத்துக் கொள்வார்களே ஒழிய நாட்டிற்கு எதையும் செய்யமாட்டார்கள்.

இது தொடர்ந்தால் 2022ம் ஆண்டைப் போன்று 2028ஆம் ஆண்டிலும் கடனை அடைக்க முடியாது நாடு வங்குரோத்து நிலையை அடைந்து விடும் என்று சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார். (ந-7)

# ரணிலுக்கு எதிராக மற்றுமொரு மனு உயர்நீதிமன்றில் தாக்கல்

## மனுவை விசாரிக்க மன்று முடிவு

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பலருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை (01) அனுமதி வழங்கியுள்ளது.

2023 ஆம் ஆண்டு லங்கா பாஸ்பேட் லிமிடெட் (Lanka Phosphate Limited) நிறுவனம், எப்பாவல பாஸ்பேட் (Eppawala phosphate) நிறுவனத்தை உலக சந்தை விலையை விட மிகக் குறைந்த விலையில் மூன்று நிறுவனங்களுக்கு விற்பனை செய்ததால் அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்பட்டதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

டி.எம் டிரேடர்ஸ் நிறுவனம் (D.M Traders), திசரு சர்வதேச இன்ஜினியரிங் நிறுவனம் (Disaru International Engineering Company) மற்றும் இச்சிபான் பிரைவட் லிமிடெட் (Ichiban Pvt Limited) ஆகிய மூன்று நிறுவனங்களுக்கே எப்பாவல பாஸ்பேட் (Eppawala phosphate) நிறுவனம் விற்பனை செய்யப்பட்டது.

இவ்வாறு விற்பனை செய்வதற்கு எந்தச் சட்ட அதிகாரமும் இல்லை என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்ட நீதிமன்றம் குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. (ந-7)

## தனக்காக குரல் கொடுத்தவர்களுக்கு நன்றி பாராட்டினார் ரணில் விக்கிரமசிங்க

தனது கைது நடவடிக்கையின் போது தன்னை ஆதரித்த அனைத்துத் தரப்பினர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்துள்ளார்.

நேற்று சிறப்புக் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ள அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“நான் கைது செய்யப்பட்ட நேரத்தில் எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

பிறிதொரு நாளில் அனைவரையும் நேரில் சந்திப்பேன் என்று நம்புகிறேன். என்றுள்ளது.

# புகையிரதத்துடன் மோதுண்ட பட்டா

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த புகையிரதமானது வவுனியாவில் பட்டா ரக வாகனத்தை மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 3:30 மணியளவில் குறித்த அசம்பாவிதம் இடம் பெற்றுள்ளது.

புகையிரதம் வந்த வேளை குறித்த பட்டா ரக வாகனமானது வவுனியா - மன்னார் வீதியில் உள்ள புகையிரதக் கடவையைக் கடக்க முயற்சித்த வேளையே இவ் விபத்து சம்பவித்துள்ளது.

பட்டா வாகனம் தூக்கி வீசப்பட்ட நிலையில் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகள், தாய் ஆகிய மூவரும் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அப்பகுதியில் நின்ற பொது மக்களால் மீட்கப்பட்டு, வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த விபத்து இடம் பெற்ற வேளை புகையிரதக் கடவை மூடப்பட்டிருக்கவில்லை எனவும் புகையிரதத்தின் எச்சரிக்கை சமிக்ஞை ஒலி கிடைக்கவில்லை எனவும் விபத்தினை நேரில் பார்த்தவர்கள் விசனம் வெளியிட்டுள்ள நிலையில் வவுனியாப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 50

சொக்கன்



மொசாட் இப்படி யோசித்துக்கொண்டிருக்கும்போது இன்னொரு புதிய பிரச்சினை இங்கிலாந்தைச் சேர்ந்த "தி சன்டே டைம்ஸ்" என்ற செய்தித்தாள் டிமோனோவின் புகைப்படங்கள் அதுபற்றிய செய்தியை வெளியிட ஒப்புக் கொண்டுவிட்டது.

ஆஸ்கர் உற்சாகமானார். நானே செய்தி ஃபோட்டோஸ் எல்லாத்தையும் அனுப்பி வைக்கிறேன் எப்ப காசு கொடுப்பீர்கள்?

அவசரப்படாதீங்க சார் இந்தச் செய்தி உண்மையா பொய்யா என்று நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா? சண்டே டைம்ஸ் நிர்வாகம் எச்சரிக்கையாகப் பேசியது. முதல்ல நாங்க மிஸ்டர் மொர்டெசாய் வனுனுவைச் சந்திச்சுப் பேசணும்.

சட்டென்று ஆஸ்கரின் உற்சாகம் வடிந்துவிட்டது. எதுக்கு? என்றார் சந்தேகமாக.

உங்களை நம்பி ஏதோ ஒரு செய்தியை நாங்கள்வெளியிட முடியாது மிஸ்டர். மொர்டெசாய் சொல்கின்றதெல்லாம் நிஜம் தானா என்று சில நிபுணர்களை வைத்து டெஸ்ட் பண்ணுவோம். அவர்கள் எல் லோரும் ஓகே சொன்னாதான் நியூஸ்.

இதற்காக லண்டனிலிருந்து பீட்டர் ஹௌனம் என்ற பத்திரிகையாளர் சிட்னி வந்தார். மொடெ சொய்வனுனுவை நேரில் சந்தித்துப் பேசினார்.

அடுத்தபடியாக மொர்டெசாய் லண்டனுக்குப் பறந்தார். அங்கே அணு ஆராய்ச்சிபற்றி நன்றாகத் தெரிந்த நிபுணர்கள் சிலர் அவரைக் குறுக்கு விசாரணை செய்தார்கள். அவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் தனக்குத் தெரிந்தவரை பதில் சொன்னார் மொர்டெசாய்.

கடைசியாக இந்த நிபுணர்கள் சன்டே டைம்ஸூக்குத் தகவல் அனுப்பினார்கள். இந்த ஆள் ஏமாற்றும் பேர்வழி இல்லை நிஜமாகவே அணு ஆராாய்ச்சி நிலையத்தில் வேலை செய்திருக்கிறார். விடயம் தெரிந்தவர்தான் இவரை நம்பலாம்.

அப்புறமென்ன? இஸ்ரேலின் டிமோனோ ஆராய்ச்சி நிலையத் தைப் பற்றியும் அங்கே தயாராகிவரும் அணு குண்டுகளைப் பற்றியும் மொர்டெசாய் கொடுத்த தகவல்கள் புகைப் படங்கள் அடிப் படையில் சன்டே டைம்ஸில் செய்தி வருவது உறுதியாகிவிட்டது.

இந்த விடயத்தைக் கேள்விப்பட்ட இஸ்ரேல் அரசாங்கம் நடுங்கிப்போய்விட்டது. பிரதமர் ஷிமோன் பெரெஸ் மொசாட் தலைவர் நாஹூம் அத்மோனி உள்ளிட்ட பலர் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். இனிமேல் ஒரு நிமிடம்கூட தாமதிக்கக்கூடாது. உடனடி யாக மொர்டெசாயைக் கடத்தியாக வேண்டும். ஒரு வேளை அந்த சன்டே டைம்ஸ் செய்தி வெளி யானால் கூட அதை உறுதிப்படுத்துவதற்கு அதுபற்றிக் கூடுதல் தகவல்களைக் கொடு ப்பதற்கு மொர்டெசாய் வெளியே இருக்கக்கூடாது.

ஆனால் ஒரே ஒரு பிரச்சினை மொர்டெசாய் வனுனு இப்போது லண்டனில் இருக்கிறார். அங்கே வைத்து அவரைக் கடத்தினால் அநாவசியமாகப் பிரச்சினை வரும்.

இங்கிலாந்துப் பிரதமர் மார்கரெட் தாட்சர் சாதாரணப் பெண் இல்லை. இரும்பு மனுஷி அவருக்கு இஸ்ரேல் மேல் கோபம் வந்தால் நல்லதில்லை.

ஆக எப்படியாவது அந்த மொர்டெசாயை இங்கிலாந்திலிருந்து வெளியே கொண்டுவர வேண்டும் என்ன செய்யலாம்? தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தது மொசாட்.

அதே நேரம் அங்கே லண்டனில் மொர்டெசாய் வனுனுசெம கடுப்பில் இருந்தார். பேட்டி விசாரணை பாதுகாப்பு என்று சன்டே டைம்ஸ் நிர்வாகம் தன்னை ஒரே அறைக்குள் கைதி போல அடைத்து வைத்திருப்பது அவருக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. என்னை எப்பய்யா ரிலீஸ் பண்ணுவீங்க? என்று கத்தினார்.

சார் எல்லாம் உங்க பாதுகாப்புக்காகதான் சொல்றோம் தயவு செய்ஞ்சு கோவப்படாதீங்க இந்தச் செய்தி வெளியாகறவரைக்கும் நீங்க வெளியே தலைகாட்டாம இருக்கிறதுதான் நல்லது.

அதெல்லாம் முடியாது ஒரே இடத்தில் உட்கார்ந்து உட்கார்ந்து எனக்கு போராடிக்குது. நான் கொஞ்சத் தூரமாவது நடந்துட்டு வர்றேன். மொர்டெசாய் புறப்பட்டுவிட்டார்.

சரி சார் ஒரு சேஃப்டிக்காக நாங்களும் உங்களோடு வருகின்றோம்.

என்னய்யா இப்படிப்படுத்தறீங்க? என்று எரிச்சலுடன் வெடித்தார். மொர் டெசாய். அரை மணி நேரத்தில் எனக்கு ஒன்றும் ஆகிவிடாது மனுஷனைக் கொஞ்சம் நிம்மதியாக விடுங்கய்யா!

வெளியே பிரமாதமான வானிலை. ரொம்ப நாளைக்குப் பிறகு மொர்டெசாயின் நடையில் உற்சாகத்துள்ளல் தெரிந்து. தன்னைக் கடந்து செல்லும் பெண்களைக் கண்கொட்டாமல் பார்த்தார். லண்டன் பொண்ணுங்க லட்டு லட்டா என்ன அழகு! இவ்ளோ நாளா இதைக் கூட ஜாலியா ரசிக்கவிடாம தடிப் பயலுங்க என்னை ரூமுக்குள்ள அடைச்சுப் பூட்டிவிட்டார்களே!

யோசித்துக்கொண்டே நடந்த மொர்டெசாய் ஓரமாக நின்றிந்த ஒரு பெண்ணைக் கவனித்தார். கொஞ்சம் பூசினாற்போல் உடல்வாகு செம்பட்டை தலைமுடி ஏகப்பட்ட மேக்கப் வயது என்ன இருபத்தைந்து இருக்குமா?

சட்டென்று அவளை நெருங்கி ஹலோ சொன்னார் மொர்டெசாய் . நீங்க டூரிஸ்டா? ஓ யெஸ் என்றாள் அவள் கண்ணிமைகள் அழகாகப் படபடத்தன. என் பேர் சிண்டி ஃப்ரம் அமெரிக்கா.

ஹாய் ஐயாம் மொர்டெசாய். ஃப்ரொம் அவுஸ்திரேலியா அவர்கள் ஒரே மாதிரியாகச் சிரித்தார்கள் காஃபி சாப்பிடலாமா?

ஷ்யூர் மொர்டெசாயும் சிண்டியும் சாலையைக் கடந்து நடந்தார்கள்.

சிண்டி நீங்க அமெரிக்காவில் என்ன செய்யறீங்க?

ப்யூட்டி பார்லர்ல வேலை பார்க்கிறேன். உங்களைப் பார்த்தாலே தெரியுது யு ஆர் வெரி ப்யூட்டி ஃபுல் மொர்டெசாய் ஜொல்லு வடிக்க சிட்னியின் கன்னங்கள் வெட்கிச் சிவந்தன.

மொர்டெசாய் உள்ளுக்குள்சிரித்துக் கொண்டார். பரவாயில்லை குட்டி சீக்கிரம் மடங்கிடும்போலிருக்கு!

அப்போது அவருக்குத் தெரியாத விடயம் சிண்டி சாதாரண குட்டி இல்லை. மொர்டெசாய்க்குத் தூண்டில் போடுவதற்காகவே மொசாட் தயார்செய்து அனுப்பி வைத்த ஸ்பெஷல் குட்டி!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இராணுவத்தின்...

தெரிவித்தார்.

மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் நேற்றுத் திங்கட்கிழமை ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரிக்கப்பட்டிருந்த எம்மை ஒன்றிணைக்கத் தேர்தல் தேவையாக இருந்தது. எமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள எதிர்பார்க்கப்பட்ட இந்த ஒன்றிணைவை மேலும் வலுப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. எதிர்காலத்தில் எமது பிள்ளைகள் பிரிந்திருக்க முடியாத நாட்டை உருவாக்க வேண்டும். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற பேதமின்றி நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதில் விசேடமாக வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மக்கள் இருக்கின்றார்கள். அதற்கான நிலத்தை மக்களுக்கு வழங்க வேண்டிய தேவையுள்ளது.

யுத்தம் காரணமாக பாரிய இராணுவ முகாம்கள் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்தன. இனி ஒருபோதும் யுத்த ஆபத்து இல்லை. இனி யுத்தம் நடைபெறும் என்று இந்தக் காணிகளை நாம் வைத்திருக்கவில்லை. எமது அரசாங்கம் யுத்தம் இனிமேல் நடக்காமல் இருப்பதற்கான வேலைகளைச் செய்து வருகின்றது. சில அரசாங்கங்கள் யுத்தம் நடைபெற்றாலும் என நினைத்து காணிகளை வைத்திருந்தன. ஆனால் நாம் மக்களின் காணிகளையும் வீதிகளையும் மக்களின் பயன்பாட்டிற்கு விரைவாக வழங்குவோம் என்றார். (ந-7)

## பலரது...

ஜனாதிபதி அநுர குமார தலைமையில் நேற்றுத் திங்கட்கிழமை யாழில் குடிவரவு, குடியகல்வு பிராந்திய திணைக்களம் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது திரை நீக்கம் செய்யப்பட்ட கல்வெட்டானது பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

குறித்த கல்வெட்டில் தமிழுக்கு முதன்மையளித்தமை, "பொதுமக்களது நிதியைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டது" எனும் வாசகம் பொறிக்கப்பட்டமை மற்றும் ஜனாதிபதியின் பெயர் குறிப்பிடாமை போன்றன பலரது வரவேற்பினையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பொதுமக்கள்...

கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொலிஸாருக்கு மக்கள் மத்தியில் நல்ல பெயர் இல்லை. இதை அவர்கள் உணர்ந்து கொண்டு மக்களின் நம்பிக்கையை வெல்ல வேண்டும்.

இதற்காகப் பொலிஸார் மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற வேண்டும். அவ்வாறு அவர்கள் சேவையாற்றினால் மக்கள் மத்தியில் பொலிஸாருக்கு மதிப்பு ஏற்படும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (க-7)

## நாட்டில் மீண்டும்...

கண்டவாறு கூறினார்.

செம்மணி மனிதப் புதைகுழி பற்றி எம் அனைவருக்கும் தெரியும். அவ்வாறானதொரு மனிதப் புதைகுழி மீண்டும் இந்த நாட்டில் ஏற்படக்கூடாது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்றபாகுபாடின்றி நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

வடக்கில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் நலன்சார்ந்து குடிவரவு, குடியகல்வு திணைக்களப் பிராந்திய காரியாலயம் அமைக்கப்படுகிறது.

அதேபோல வடக்கு மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மயிலிட்டித்துறைமுகம் விஸ்தரிக்கப்படுகிறது.

மண்டைதீவில் சர்வதேச விளையாட்டரங்கு அமைக்கப்படும். இதனால் பலவேறுபட்ட அபிவிருத்திகள், வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும்.

தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற பாகுபாடின்றி அனைவரும் ஒரே அரங்கில் இருந்து கரகோசம் இடவே இந்த சர்வதேச மைதானம் என அவர் மேலும் தெரிவித்தார்.

செம்மணிப் புதைகுழியை ஜனாதிபதி பார்வையிடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் அது தொடர்பில் மேற்கண்டவாறு தனது உரையில் கூறினார். (க-7)

## அரச உத்தி...

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச உத்தியோகத்தர்களின் கையொப்பத்திற்கு சக்தி இருக்கிறது. உதாரணமாக அரசாங்க அதிபரின் கையொப்பத்துக்கு சக்தி இருக்கிறது.

அதேபோல பிரதேச செயலர்களின் கையொப்பத்திற்குச் சக்தி இருக்கிறது. இந்தச் சக்தி மக்கள் நலன் சார்ந்தே இருக்க வேண்டும். மாறாக அவர்களின் கையொப்பம் மக்கள் நலனுக்கு விரோதமாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது அரசாங்கத்தினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது.

அதன்படி ஏலவே ஒரு கட்டமாக சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக எதிர்வரும் ஜனவரி மாதம் மீண்டும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அடுத்த கட்டச் சம்பள உயர்வு வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.(க-7)

## இனி...

நேற்றுத்திங்கட்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற குடிவரவு, குடியகல்வு திணைக்கள அங்குரார்ப்பண நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

இனவாதம் வடக்கிலும் இருக்கிறது. தெற்கிலும் இருக்கிறது. வடக்கில் இனவாதம் மக்களுக்கானதல்ல. அது அரசியல்வாதிகளுக்கானது. அதேபோல தெற்கில் உள்ள இனவாதம் மக்களுக்கானதல்ல. அதுவும் அரசியல்வாதிகளுக்கானதே.

இந்த நாட்டில் இனியொரு முறை இனவாதம் தலைதூக்க இடமளிக்கப் போவதில்லை. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் எனப் பிரிந்து நின்றவர்கள் அனைவரையும் சந்தேகக் கண்கொண்டு பார்த்தவர்கள் என அனைவரும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் மூலம் ஒன்றிணைந்திருக்கின்றோம்.

எமது நாட்டைக் கட்டியெழுப்ப, அடிப்படையில் இருந்து வரவேண்டியுள்ளது. தமிழ், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற பிரிவினையைக் கைவிட்டு, எதிர்காலச் சந்ததிக்காய் எமது நாட்டை நாம் அனைவரும் ஒன்றிணைந்து கட்டியெழுப்புவோம் என அவர் தெரிவித்தார். (க-7)


மஹஜன சம்பத
திகதி 2025.09.01
சீட்டிழுப்பு இலக்கம் 5939
E 5 9 7 3 9 5
அத சம்பத
E 7 3 9 5
சீட்டிழுப்பு இலக்கம் 0514

சுப தவசக்
திகதி 2025.09.01
சீட்டிழுப்பு இலக்கம் 0055
துலாம் 03 24 27 42

தன நிதானய
திகதி - 2025.09.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1969
W 17 27 37 66 W

மெகா பவர்
திகதி 01/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2287
P 03 09 22 23 27

ஜய
திகதி 2025.09.01
சீட்டிழுப்பு இலக்கம் 0207
H 3 1 6 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4181
சீட்டிழுப்பு திகதி 01.09.2025
W 10 28 44 59
W

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.01
சீட்டிழுப்பு இலக்கம் 1248
இடபம் 09 24 52 53 இடபம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.09.2025 வெற்றி வாரம் 0647
X 7 3 4 3 9 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,288,241.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2913
சீட்டிழுப்பு திகதி 2025.09.01 தினம் திங்கட்கிழமை
08 33 38 41 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,412,360.80

சனிதா
திகதி 01.09.2025 வெற்றி வாரம் 5074
14 36 55 71 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,839,800.00

ஜயோதா
திகதி 2025.09.01 வெற்றி வாரம் 2157
08 09 20 27 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,374,301.20


ராசி
சீட்டிழுப்பு வாரம் 4625
சீட்டிழுப்பு திகதி 01.09.2025 தினம் திங்கட்கிழமை
11 24 45 52 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,849,805.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
2089
01.09.2025 திங்கட்கிழமை
L 01 35 39 47 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.591,358,989.80

அத கோடிபதி
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2739
சீட்டிழுப்பு திகதி: 2025.09.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.88,139,375.20
22 36 40 76 M


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 04.08.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் வல்லிபுரம் சிவானந்தம்

அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் நாளை 03.09.2025 புதன்கிழமை அதிகாலை 04.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று ஊறணி புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து காலை 09.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(1506)

புதுவளவு,
பொலிகண்டி கிழக்கு.

தகவல் :
குடும்பத்தினர்

## 9 என்புத்...

கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் முழு என்புத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப்புதைகுழியின் இரண்டாம் சுற்றின் மூன்றாம் கட்டத்திற்கான அனுமதி யாழ்ப்பாணம் நீதிமன்றினால் வழங்கப்பட்டிருந்த நிலையில், மூன்றாம் கட்டத்தின் எட்டாம் நாள் அகழ்வுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா தலைமையில் இடம்பெற்ற குறித்த அகழ்வில் என்புத் தொகுதிகளுக்கு மேலதிகமாக வட்ட வடிவிலான தாயத்து ஒன்றும் மோதிரம் எனச் சந்தேகிக்கத்தக்க வட்ட வடிவான ஆபரணம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் குவியலான என்புத் தொகுதியும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதுவரை 218 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், குறித்த குவியலான என்புத் தொகுதிகள் சுத்திகரிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்படும் பட்சத்தில் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவுகின்றது.

(ந-7,33)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3784)

076 825 7716 (ஆகாஸ்)

காயத்திரி திருமண சேவை

சகல விதமான திருமண பொருத்தங்களும் பார்க்கப்படும்.
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
உரும்பிராய்
077 844 9861, 076 314 4689
(5309)

உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்





விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- 50,000/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-3783)
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-3783)
UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237


# மரண அறிவித்தல்



மலர்வு 25.07.1934 | உதிர்வு 30.08.2025

## நடராசா கயிலாயர்

### (இளைப்பாறிய ஆசிரியர்)

யாழ். துன்னாலை கோவிற்சந்தையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட நடராசா கயிலாயர் அவர்கள் கடந்த 30.08.2025 சனிக்கிழமை அன்று துன்னாலை கோவிற்சந்தையில் (மணியாதோட்டம்) காலமானார்.

அன்னார் நடராசா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் ரெஜிஸ்ரார் சபாபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் திருச்செல்வி (பபி), இளஞ்செல்வி(உஷா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தகுமார், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் தங்கராஜா, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை 03.09.2025 புதன்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
076 916 5270, 077 228 9413

(C-3785)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.